Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 19 | ( 04-12-93 ) | சனிக்கிழமை | ஓசை 289

PUBLIC LIBRARY JAFFNA …

## வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு நிவாரணம் வழங்க அனுமதி!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பொதுஇடங்களில் வாழும் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு யாழ். செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. இதன்படி கடந்த முதலாம்திகதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பொதுஇடங்களில் வாழும் எண்ணாயிரம் குடும்பங்களுக்கு இந் நிவாரணம் பத்துத் தினங்களுக்கு வழங்க நேற்று செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது இதற்கிணங்க முதல் மூன்று தினங்களுக்கு சமைத்த உணவும் அதனைத் தொடர்ந்த ஒரு வாரத்திற்கு உலர் உணவும் விநியோகிக்கப்படவுள்ளது. இந் நிவாரணங்கள் அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க (4ஆம் பக்கம் பார்க்க)

# விமானத் தாக்குதல்களைக் கண்டித்து பல்லாயிரம் மக்கள் மௌனப் பேரணி!

## ஜனாதிபதிக்கு மகஜர் சமர்ப்பிப்பு!

(யாழ்ப்பாணம்)

**குருநகர் புனித யாகப்பர் தேவாலயம் உட்பட இதர வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், செயலகம் மற்றும் மக்களின் குடியிருப்புக்கள் மீதான சிறிலங்கா விமானப்படையின் கண்மூடித்தனமான குண்டுவீச்சைக் கண்டித்து நடைபெற்ற மௌன பேரணியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் கறுப்பு பட்டிகளை அணிந்திருந்ததோடு, சிறிலங்கா அரசிற்கு எதிரான சுலோக அட்டைகளையும் எடுத்துச் சென்றிருந்தனர். இவ் ஊர்வலத்தின் முடிவில், விமானத்தாக்குதலைக் கண்டித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.**

இப்பேரணி நேற்றைய தினம் காலை 9 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது. இப்பேரணி யாழ். மறை வட்டக் குருக்கள், கன்னியாஸ்திரிகள், இந்துமதத்தைச் சேர்ந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கம்பன்கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ், யாழ். மாவட்ட வெகுஜன அமைப்பின் ஒன்றியத்தலைவர் திரு. சூ. சிறில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், குருநகர் வர்த்தகசங்கம், குருநகர் கடற்றொழில் சங்கம், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி மற்றும் பொது மக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டார்கள்.

காலை 9 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் கூடிநின்ற பெருந்திரளான மக்கள் முன் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளார் இறைவனுக்கு வணக்கம் செலுத்தியபின்னர் மௌனப் பேரணி யாழ். நகர் ஊடாக நகர ஆரம்பித்தது

இப்பேரணி பிரதான வீதியூடாகச் சென்று முதலாம் குறுக்குவீதி வழியாக யாழ், ஆஸ்பத்திரிவீதியை அடைந்து அங்கிருந்து கஸ்தூரியார்வீதி வழியாக சென்று ஸ்ரான்லி வீதியையடைந்து அங்கிருந்து (4ஆம் பக்கம் பார்க்க)

## வழிபாட்டு தலத்தை அழிப்பது மனிதாபிமானமற்ற செயல்!

இறை வழிபாட்டு இடத்தை அழித்தும், வழிபாட்டில் ஈடுபட்டிருந்த விசுவாசிகளைக் கொன்றதுமான ஆத் … மையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

இவ்வாறு புனித யாகப்பர் தேவாலயம் மீது 1993 நவ … கொள்ளப்பட்ட கோரத்தனமான தாக்குதல் குறித்து மேற்படி தேவாலயப் பங்கு மக்கள் ஜனாதிபதி டி. பி,

## யாழ். குடாநாட்டையும் இன்று சூறாவளி தாக்கலாம்

(கொழும்பு)

தீவிரமான சூறாவளிஇன்று யாழ்குடா நாட்டை கடந்து செல்லும் என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்தது. வங்காள விரிகுடாவின் தென்மேற்கே நிலைகொண்டிருந்த சூறாவளி தீவிரமடைந்து நேற்று மாலை ஆறு மணியளவில் முல்லைதீவிற்கு கிழக்கே 250 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்தது.

இன்று காலை யாழ்குடாநாடு வழியாக தமிழக தென் கரையை நோக்கி சூறாவளி நகரும் எனவும் வடபகுதி முழுவதும் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. மணிக்கு 104 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வடபகுதியில் வீசும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வேளையில் கடலும் கொந்தளிப்பாகக் காணப்படும்.

தென் மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் நேற்றிரவு நாகபட்டணத்துக்குத் தென்கிழக்கே 230கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருப்பதாகசென்னை வானொலி நிலையவானிலை அறிக்கை தெரிவித்தது.

## குடாநாட்டில் பரவலாக பலத்த மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பலத்த மழை தொடர்ந்து பெய்துவருகிறது. நேற்று நண்பகலுக்குப்பின்னர் ஆரம்பித்த மழை தொடர்ந்தும் பெய்துவருவதால குடாநாட்டின் தாழ் நிலப்பகுதிகள் எங்கும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு முழுவதும் மழை கொட்டியவண்ணமிருந்தது பலவீதிகளில் வெள்ளம பாய்ந்தோடியவண்ணமிருந்தது தாழ்நிலப் பகுதிகளில் காணப்பட்ட குடியிருப்புக்கள் பலவற்றுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டதாக ஆங்காங்கு இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொழும்பு நகரில் பதற்ற நிலை;

கொண்டனர். இப்பேரணியில் கலந்துகொண்டவர்கள் கறுப்பு பட்டிகளை அணிந்திருந்ததோடு, சிறிலங்கா அரசிற்கு எதிரான சுலோக அட்டைகளையும் எடுத்துச் சென்றிருந்தனர். இவ் ஊர்வலத்தின் முடிவில், விமானத்தாக்குதலைக் கண்டித்து சிறிலங்கா ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இப்பேரணி நேற்றைய தினம் காலை 9 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகியது. இப்பேரணி யாழ். மறை வட்டக் குருக்கள், கன்னியாஸ்திரிகள், இந்துமதத்தைச் சேர்ந்த சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கம்பன்கழக அமைப்பாளர் திரு. ஜெயராஜ், யாழ். மாவட்ட வெகுஜன அமைப்பின் ஒன்றியத்தலைவர் திரு. சூ. சிறில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், குருநகர் வர்த்தகசங்கம், குருநகர் கடற்றொழில் சங்கம், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி மற்றும் பொது மக்களும் பெருந்திரளாகக் கலந்து கொண்டார்கள்.

காலை 9 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் கூடிநின்ற பெருந்திரளான மக்கள் முன் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகளார் இறைவனுக்கு வணக்கம் செலுத்தியபின்னர் மௌனப் பேரணி யாழ். நகர் ஊடாக நகர ஆரம்பித்தது

இப்பேரணி பிரதான வீதியூடாகச் சென்று முதலாம் குறுக்குவீதி வழியாக யாழ், ஆஸ்பத்திரிவீதியை அடைந்து அங்கிருந்து கஸ்தூரியார்வீதி வழியாக சென்று ஸ்ரான்லி வீதியையடைந்து அங்கிருந்து (4ஆம் பக்கம் பார்க்க)

...வானிலை அவதான நிலையம் அறிவித்தது. வங்காள விரிகுடாவின் தென்மேற்கே நிலைகொண்டிருந்த சூறாவளி தீவிரமடைந்து நேற்று மாலை ஆறு மணியளவில் முல்லைதீவிற்கு கிழக்கே 250 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டிருந்தது.

இன்று காலை யாழ்குடா நாடு வழியாக தமிழக தென் கரையை நோக்கி சூறாவளி நகரும் எனவும் வடபகுதி முழுவதும் இடியுடன் கூடிய மழை பெய்யும் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்தது. மணிக்கு 104 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த...டும்.

தென் மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள புயல் ... வானொலி நிலையச் வானிலை அறிக்கை தெரிவித்தது.

## குடாநாட்டில் பரவலாக பலத்த மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் பலத்த மழை தொடர்ந்து பெய்துவருகிறது. நேற்று நண்பகலுக்குப்பின்னர் ஆரம்பித்த மழை தொடர்ந்தும் பெய்துவருவதால குடாநாட்டின் தாழ் நிலப்பகுதிகள் எங்கும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு முழுவதும் மழை கொட்டியவண்ணமிருந்தது பலவீதிகளில் வெள்ளம பாய்ந்தோடியவண்ணமிருந்தது தாழ்நிலப் பகுதிகளில் காணப்பட்ட குடியிருப்புகள் பலவற்றுக்குள் வெள்ளம் புகுந்துவிட்டதாக ஆங்காங்கு இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வழிபாட்டு தலத்தை அழிப்பது மனிதாபிமானமற்ற செயல்!

இறை வழிபாட்டு இடத்தை அழித்தும், வழிபாட்டில் ஈடுபட்டிருந்த விசுவாசிகளைக் கொன்றதுமான ஆத்திரமூட்டும், முற்றிலும் மனிதாபிமானமற்ற செயலுக்கு எதிராக நாம் எமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம்,

இவ்வாறு புனித யாகப்பர் தேவாலயம் மீது 1993 நவம்பர் 13 ஆம் திகதி காலை 7-15 மணியளவில் சிறிலங்கா விமானப் படையினால் மேற்கொள்ளப்பட்ட கோரத்தனமான தாக்குதல் குறித்து மேற்படி தேவாலயப் பங்கு மக்கள் ஜனாதிபதி டி. பி, விஜேதுங்கவுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர், (4ஆம் பக்கம் பார்க்க)

# அகிம்சை நசுக்கப்பட்டதால் தமிழினம் ஆயுதம் ஏந்தியது!

## வண.பிதா இம்மனுவேல்

(நமதுநிருபர்)

1956இல் ஆரம்பமான எமது அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் நீண்டு கொண்டே செல்கின்றது. சிறிலங்கா அரசு எமது அசிம்சை போராட்டத்தை தனது அடக்கு முறைமூலம் நசுக்க முற்படடது அதனைஎதிர்த்து ஆயுத போராட்டம் மூலமே எம்மீதான அடக்குமுறையை உடைத்தெரியலாம் என்ற நிலைக்கு எமது இனம் தள்ளப்பட்டது.

இவவாறு கத்தோலிக்ககுரு முதல்வர் வணபிதா இம்மனுவேல் தெரிவித்தார். புனித யாகப்பர் ஆலயம் மீது சிறிலங்கா விமானப்படையினர் திட்டமிட்டு நடத்திய குண்டு வீச்சைக் கண்டித்துநடாத்தப் பட்ட மாபெரும் மௌன ஊர்வலத்தின் முடிவில் யாழ். (4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரில் பதற்ற நிலை; பொலிஸ் - முஸ்லிம் குழு மோதல்!

## இரு தரப்பிலும் பலர் காயம்

(கொழும்பு)

கொழும்பு - வாழைத் தோட்டப் பகுதியில் முஸ்லிம் குழுவொன்றிற்கும் பொலிசாருக்கும் இடையே நேற்று நடைபெற்ற மோதலில் இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல பொலிசாரும், முஸ்லிர்களை பலரும் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் பதற்றநிலை காணப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு ஆரம்பத்தில் வட்டிக்குப் பணம் கொடுக்கும் முஸ்லிம் ஒருவரும் அவரிடம் பணம் பெற்ற சிங்களவர் ஒருவருக்கும் இடையில் எழுந்த தகராற்றில் சிங்களவர் கொல்லப்பட்டார். இதைத் தொடர்ந்து இங்கு இரு சமூகத்தினருக்கும் இடையே நிலவிவந்த பதற்றமே நேற்றைய மோதலுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

புறக்கோட்டை பள்ளிவாசலில் தொழுகை முடித்தபின்னர் தடிகள், கற்கள், போத்தல்கள் என்பன சகிதம் புறப்பட்ட முஸ்லிங்களே வாழைத்தோட்டம் உப பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது இரு பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல பொலிசாரும், பல முஸ்லிம்களும் படுகாய (4 ஆம் பக்கம் பார்க்க)

# செயலகத்தின் சேதம் ஹமில்டனுடன் பேச்சு

(கொழும்பு)

தற்போது கொழும்பில் தங்கியுள்ள யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவை சந்தித்து யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை குறித்து எடுத்துவிளக்கியுள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த திங்களன்று இச் சந்திப்பு நடைபெற்றது.

யாழ். செயலகம் மீது சிறிலங்கா விமானப்படை நடத்திய குண்டுவீச்சு, அதனால் ஏற்பட்டசேதங்கள் என்பவை குறித்தும் யாழ். மக்கள் முகம் கொடுக்கும் கஷ்டங்கள் குறித்தும் யாழ். அரசஅதிபர் இச் சந்திப்பில் ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவிற்கு விளக்கினார். (4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி தளம் மீதான தாக்குதல் அரசை சிந்திக்கச் செய்துள்ளது

## யாழ். அரச அதிபர் பி. பி. ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

''பூநகரி சம்பவத்திற்குபின் அரசதரப்பினர் சிறிது யோசித்து வருகின்றனர். இராணுவ தீர்வு பயனளியாது அரசியல் தீர்வில் செல்லுங்கள் என்றே நான் பிரதமரை சந்தித்து பேசியபோதும் விளக்கினேன். அரசின்மாற்றம் எப்படி அமையும் என்பது என்னால் கூற முடியவில்லை'' இவ்வாறு யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் பி. பி ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்

அப் பேட்டியின் விபரம் வருமாறு:

கேள்வி: யாழ்ப்பாணம் மீதான குண்டு வீச்சின் போது உங்கள் அலுவலகம் மீது குண்டு வீழ்ந்து உங்களுக்கும் லேசான காயம் ஏற்பட்டதாக செய்திகள் வந்தனவே?

பதில்: ஒருகுண்டு என் செயலகம் முன் வீழ்ந்தது. மற்றையகுண்டு எனது அறையின் அருகே வீழ்ந்தது. இரண்டும் கடுமையான சேதம் ஏற்படுத்தியது. எனக்கு லேசானகாயமில்லை. பெரிய காயம் நான்குதையல் போட வேண்டியிருந்தது.

கேள்வி: தேவாலயங்கள் மீதும் குண்டுகள் வீழ்ந்தனவா?

பதில்: 132 வருடங்களுக்கு முன் கட்டிய சென். ஜேம்ஸ் என்ற தேவாலயம் (4ஆம் பக்கம் பார்க்க)

# குண்டுவீச்சை நிறுத்துக பிரதமரிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டில் அரச கட்டடங்கள் மற்றும் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள், மக்கள் குடியிருப்புகள் மீது சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நடாத்தும் குண்டு வீச்சு தாக்குதல்களை நிறுத்துமாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சிறிலங்கா பிரதமர் திரு. ரணில்விக்கிரமசிங்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை (4ஆம் பக்கம் பார்க்க)

## வாடகைக் கார் உரிமையாளர் சந்திப்பு

யாழ் மாவட்டத்திற் குட்பட்ட வாடகை மோட்டார் கார் வாகன உரிமையாளர்களுக்கான சந்திப்பொன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ் புதிய மத்திய பஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல கார் உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மூதூர் அதிரடியில் ஆயுதங்கள் மீட்பு

திருக்கோணமலையில் நேற்று முன்தினம் விடுதவலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது இராணுவ ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப் பட்டன. நேற்று முன்தினம் காலை 8.25 மணியளவில் ஈச்சிலம்பத்தை இராணுவ முகாமிற்கும் பூநகர் இராணுவ முகாமிற்கும் இடையில் பூநகர் முகாமிலிருந்து சுத்திகரிப்புநடவடிக்கைக்காகவந்த பத்திற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் திடீர தாக்குதல் நடத்தினர்.

இதன்போது இவர்களுக்கு உதவ பூநகர் 49ஆம் கட்டை ஈச்சிலம்பத்தை ஆகிய முகாம்களில் இருந்து வந்த படையினர் மீதும் புலிகளின் மற்றுமோர் அணி தாத்குதல் நடத்தியது. 25 நிமிடங்கள் நடந்த இத் தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட 8 படையினர் பலியானது தெரிந்ததே. இதன்போது விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

சிறிலங்கா இராணுவத்திடமிருந்து; (4ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சா. த.) பரீட்சை

# அடையாள அட்டைக்காக மாற்று ஏற்பாடுகள்

(நமதுநிருபர்)

எதிர்வரும் ஆறாம் திகதி தொடக்கம் நடைபெற இருக்கும் க பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்கள் ஆள்அடையாளத்தை கடவுச்சீட்டு, அடையாள அட்டை, தபால் திணைக்கள அடையாள அட்டை ஆகியவற்றில் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் நிரூபிக்கலாம். இல்லாவிடின் பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள் என யாழ். கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் முதல் முறையாக பரீட்சைக்குத்தோற்றும் பாடசா (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மீன் தொட்டிகள், கண்ணாடி (கடை) சோகேஸ், கோப்பி அரைக்கும் மெஷின் மோட்டார்கள், ஆங்கில தட்டச்சுகள், மர & இரும்பு அலுமாரிகள், T. V. கட்டில்கள் விற்பனைக்குண்டு தொடர்பு: டாஸ்கொம்ப்ளெக்ஸ். 161, பிரதான வீதி, (மக்கள் வங்கி அருகாமை). யாழ்ப்பாணம். (6735)

### வங்கிப்பரீட்சை

வங்கிப் பரீட்சைக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. SPOKEN ENGLISH WITH GRAMMARம் ஆரம்பம். 05-12-93 காலை 7 00 மணி V.N. KANDASAMY (Associate of The Institute ofBankers)Part I (LONDON) 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு சமீபமாக) கொக்குவில். (6766)

### சோதிடம்

கோளறிவாளர். கைப் பலன் அறிஞர் திருமணம், தோற்றம், குணநலம், உத்தியோகம், திக்சுத்திசை, குடும்ப நிலை அறியவும், பிறநாட்டுச் சாதகம் ஆங்கிலத்தில் பலன்களுடன் எண்சாத்திரம் முப்பதுஆண்டுகள் தேர்ச்சியுடைய தீர்க்கமான ஆலோசனைக்கு இராசேந்திரன் கோயில்வீதி, (முதல் வீடு), கிழக்கு கொக்குவில். (6765)

### தவறிவிட்டது

நாயன்மார்க்கட்டுக்கும், கூழாவடிஆனைக்கோட்டைக்கும் இடையில் கைச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-8056)

### தேக்கம் கிழங்கு விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியின் ஆலோசனையுடன் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் ஏற்பாட்டினால் யாழ் வன இலாகாவினால் தென் பகுதியிலிருந்து தேக்கம் கிழங்குகள் கொண்டு வரப்பட்டு உள்ளன. இத் தேக்கம் கிழங்குகளை பெற விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு

## தேவை

விஞ்ஞான ஆய்வு கூடத்தில் உதவியாளர்களாக பணிபுரிவதற்கு தகுதியானவர்கள் தேவைப்படுகின்றனர்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி
விளம்பர இல. 207,
மே|பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8027)




(சி-8047)

## கேள்வி கோரல்

### சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தினால் பின்வரும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களிற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இக்கேள்விப்பத்திரங்களைத் தாங்களாகவேதயாரித்து 10-12-93-ம் திகதிக்குமுன்னதாகக் கிடைக்கத்தக்கதாக சீல் வைக்கப்பட்ட கடித உறையில் வைத்து இப்பணிமனையில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கோரப்படும் பொருட்கள் 20-12-93 ஆம் திகதிக்குமுன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். கேள்வி கோரப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் முழுவதற்குமோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாகன உதிரிப்பாகங்களிற்கான கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | பற்றறி (Battery) | 12V 90Amp. | - 05 |
| 2. | ரயர், ரியூப் அளவு - | 205×16 | - 12 |
| | | 50×7×16 | - 04 |
| | | 600×14 | - 09 |

3. பியுவல் பில்ற்றர் (Fuel filter)

## குழியிலிருந்து எலும்புக்கூடு கல்முனையில் மீட்பு

(மட்டக்களப்பு)

கல்முனைப் பகுதியில் குழி ஒன்றிலிருந்து நாலு மனித எலும்புக் கூடுகளை கல்முனை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர்.

கல்முனை இராம கிருஷ்ண மிசனுக்கு அண்மையில் விவேகானந்தா வீதியில் வீடொன்றின் அருகே கடந்த வாரம் இவ் எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவை சிதைவடைந்து இருந்த போதும் அவற்றின் மேல் இருந்த ஆடைகள்பழுதடையவில்லை அணிந்திருந்த சாரம், சேட் என்பவற்றைக் கொண்டு எலும்புக்கூடு ஒன்றை தனது கணவருடையது என ஒரு பெண் அடையாளம் கண்டுள்ளார். கல்முனை குடியைச் சேர்ந்தவர் என்றும் 1986 இல் இனம் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார் எனவும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. மற்றைய மூவரும் இவருடன் கடத்தப்பட்டவர்களாகஇருக்கலாம் என பொலிசார் நம்புகின்றனர்.

இது தொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனராம்.

## வெள்ளப்பாதிப்பு விபரம் சேகரிப்பு

(தொல்புரம்)

குடா நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பு பற்றிய விபரங்களை யாழ். செயலக சமூக சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளதை அடுத்து மூளாய், தொல்புரம், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை, அராலிப் பகுதிகளில் வெள்ளப் பாதிப்பு பற்றிய விபரங்கள் சேகரிக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலக அதிகாரிகளும், கிராம சேவையாளர்களும் இணைந்து பாதிப்படைந்த கிராமங்களை பார்வையிட்டும், பாதிப்புற்ற மக்களுக்கு ஆறுதல் கூறியும் வருகின்றனர். சில இடங்களில் மக்கள் இடம்பெயர்ந்து வெள்ளம் அற்ற பகுதிகளான பொது இடங்களிலும், பாடசாலைகளிலும், உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (41)

## காயமுற்றார்

பருத்தித்துறை இறங்குதுறையில் தரித்து நிற்கும் கப்பலில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த தொழிலாளி செல்வராசா (வயது 40) என்பவர் படுகாயமடைந்தார். (யோ)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் எல். ஆர். முத்தையா அவர்கள்

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும், பல காலம் தலைவராகக் கடமையாற்றியும், தனது அயராத உழைப்பின் மூலம் இணையத்தின் வளர்ச்சிக்கு வழிகோலியவரும், அரச சார்பற்ற நிறுவனங்களின் குடும்பத்தில் தலைமகனாகவும், வழிகாட்டியாகவும், சிறந்த சமூக சேவையாளனாகவும், இறுதி நாள் வரை பங்காற்றி வந்துள்ள அமரர் லூட்ஸ் றேமன் முத்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
யாழ். மாவட்டம்.

(சி8055)

## கண்ணீர் அஞ்சலி

### திரு. ப. திருநாவுக்கரசு

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவரும், வடமாநில பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

### உயர்திரு L.R. முத்தையா

இன்று யாழ் மாவட்டத்தில் மட்டுமன்றி முழு ஈழத்திலும் கூட மிகப் பெரியதொரு விருட்சமாகப் பரந்து விரிந்து மனிதநேய செயல்களுக்கமைய அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தின் (1983) உபதலைவராக பல்லாண்டுகள் அரும்பெரும் சேவையாற்றி ஆயிரக் கணக்கான அகதிகளின் இன்னல்களை மனப்பூர்வமாக தீர்த்த அமரர் உயர்திரு L R. முத்தையா அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை இதய பூர்வமாகத் தெரிவிக்கிறோம்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியம்-1983
374, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(6764)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணகத்தில்
1940-01-12

விண்ணகத்தில்
1993-11-05



### திருமதி துரைசிங்கம் சோதியம்மா (J P.)

எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் ஆறாத்துயரில் மூழ்கி இருந்த எமக்கு ஆறுதல் கூறி அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (5-12-93) நடைபெறவிருக்கும் 'அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள் மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

மோகன் இல்லம்,
உடுப்பிட்டி.

தகவல்:- திருமதி லலிதா இராஜேந்திரம்
(சீமெந்துக் கூட்டுத்தாபனம் K. K. S.) (6744)

## நினைவு கூருகின்றோம்...

கும் இடையில் கைச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-8056)

## தேக்கம் கிழங்கு விநியோகம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியின் ஆலோசனையுடன் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் ஏற்பாட்டினால் யாழ் வன இலாகாவினால் தென் பகுதியிலிருந்து தேக்கம் கிழங்குகள் கொண்டு வரப்பட்டு உள்ளன. இத் தேக்கம் கிழங்குகளை பெற விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினரிடமும் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொறியியலாளர் கடத்தப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பில் இனந்தெரியாதோரால் இலக்கத்தகடு இல்லாத வெள்ளை வானில் ஆட்களைக் கடத்தும் சம்பவங்கள் மீண்டும் தலை தூக்கியுள்ளன. கொட்டாஞ்சேனை வாசியான குமாரவேலு ஹரன் (வயது 27) என்ற பொறியியலாளர் ஒருவர் அண்மையில் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளார்.

வெள்ளவத்தையில் 155-ம் இலக்க பஸ்ஸில் ஏறிய இவர் ஆமர் வீதியில் வந்து இறங்கியபோது இருவர் அவரை அணுகி விசாரணைக்கு வருமாறு கூறி வெள்ளை வான் ஒன்றில் ஏற்றிச் சென்றுள்ளதாக தெரிய வருகிறது.

இவர் வீடுதிரும்பாததால் பெற்றோர் பொலிஸ் நிலையம், இராணுவ முகாம் எல்லாம் சென்று விசாரித்த பொழுது இத்தகைய கைது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று பதிலளிக்கப்பட்டதாம்.

## வெற்றிலை விலைவீழ்ச்சி

(தொல்புரம்)

கிளாலி படகுச்சேவை ஆரம்பமாகியதை அடுத்து வெற்றிலையின் விலை கணிசமான அளவு குறைந்துள்ளது.


அண்மைக் காலமாக இங்குள்ள பொதுச்சந்தைகளில் 7ரூபா முதல் 10ரூபா வரை விற்கப்பட்டுவந்த வெற்றிலை தற்போது கிளாலி படகுச் சேவை சீராக நடைபெறுவதால் பொதுச் சந்தைகளில் அதிக அளவில் வெற்றிலை காணப்படுவதுடன், ரூபா ஒன்றிலிருந்து 75சதம் வரை மலிவான விலையில் விற்கப்படுகிறது. (41)

---

யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தினால் பின்வரும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களிற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இக்கேள்விப்பத்திரங்களைத் தாங்களாகவேதயாரித்து 10-12-93-ம் திகதிக்குமுன்னதாகக் கிடைக்கத்தக்கதாக சீல் வைக்கப்பட்ட கடித உறையில் வைத்து இப்பணிமனையில் சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கோரப்படும் பொருட்கள் 20-12-93 ஆம் திகதிக்குமுன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். கேள்வி கோரப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் முழுவதற்குமோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாகன உதிரிப் பாகங்களிற்கான கேள்விப்பத்திரம்'' என எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

1. பற்றறி (Battery) 12V 90Amp. - 05
2. ரயர், ரியூப் அளவு - 205×16 - 12
   50×7×16 - 04
   600×14 - 09
3. பியுவல் பில்ற்றர் (Fuel filter)
   Model No:
   1. MB 820900 (Pajero Ambulance) - 03
   2. PFC 158, OEM 23308 - 64010 (Toyato Ambulance) - 04
   3. 04034 - 56011 (Toyato Lorry) - 02
4. ஒயில் பில்ற்றர் (Oil filter)
   1. MB 06782(Pajero Jeep) - 02
   2. 04152 - 46011 (Toyato Lorry) - 02
   3. PFC 101, OEM 15600 - 41010 (Toyato Ambulance) - 04
5. பிறேக் லைனிங் செற்
   பஜரோ, மொடல், டொயாட்டா அம்புலன்ஸ், லான்ட்றோவர்,
6. ஷக்கிள் புஷ் (Shackle Bush)
   பஜரோ அம்புலன்ஸ்
7. ஷொக் அப்சோபர் (Shock Absorber)
   லான்ட்றோவர் (Land Rover)
8. வாகனங்களிற்கு பாதுகாப்பிற்காக முன்னால் பொருத்தப்படும் இருப்புப் பிடிகள் மூன்று (3)- பஜரோ, அம்புலன்ஸ் ஆனவை.
9. வாகன மேற்தளத்தில் ''சிலுவை'' அடையாளம் இடுதல் (சிவப்பு ஸ்பிறே பெயின்ற்) வாகனம் (அளவு 12'' - 50'')




மாதிரி வடிவம்

10. செஞ்சிலுவைக் கொடி மற்றும் கொடி பொருத்தும் தம்பம் ஆகியன விநியோகித்து இணைத்தல் கெற் லைற் செற்- டொயாட்டா அம்புலன்ஸ்

டாக்டர் பொ. இரத்தினசபாபதி
(பிராந்தியப் பணிப்பாளர்)

விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-8050)

---

இணையத்தின் ஆரம்ப காத்தாக்களில் ஒருவராகவும், பல காலம் தலைவராகக் கடமையாற்றியும், தனது அயராத உழைப்பின் மூலம் இணையத்தின் வளர்ச்சிக்கு வழிகோலியவரும், அரச சார்பற்ற நிறுவனங்களின் குடும்பத்தில் தலைமகனாகவும், வழிகாட்டியாகவும், சிறந்த சமூக சேவையாளனாகவும், இறுதி நாள் வரை பங்காற்றி வந்துள்ள அமரர் லூட்ஸ் றேமன் முத்தையா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
யாழ். மாவட்டம்.

(சி8055)

---

## கண்ணீர் அஞ்சலி

### திரு. ப. திருநாவுக்கரசு

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவரும், வடமாநில பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் ஆகிய திரு. தி. சபாரத்தினம் அவர்களின், 1993-11-25இல் முல்லைத்தீவில் சிவபதம் அடைந்த தந்தையார் திருநாவுக்கரசு அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளையும், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முகாமைப்பணிப்பாளரும்,
பிரதம வைத்திய ஆலோசகரும்,
உத்தியோகத்தர்களும்,
அலுவலர்களும்.

கூட்டுறவு மருந்துச்சாலை,
சித்தன்கேணி.

(6767)

---

## 5-ம் ஆண்டு நினைவு

தாயின் மடியில்:
22. 05. 1944

தமிழீழ மண்ணில்:
04. 12. 1988



### திரு. நா. கருணானந்தசிவம்

(ஆசிரியர் நடேஸ்வராக் கல்லூரி)

தமிழை உணவாக்கி தலைவனின் வழியாகினாய்
தாயகப் பற்றினால் தன்னுயிர் நீத்தாய்
மானம் இழந்து வாழ்ந்திட மறுத்தாய்
குண்டினைப் பரிசாய் நெஞ்சினில் ஏற்றாய்
கூடிய சிலரோ குள்ள நரிகள் ஆகினர்
ஏற்றிய ஏணியைக் காலால் உதைத்தனர்
காலத்தை வென்று காவியமானவனே
காலமெல்லாம் உன் நினைவை எமதகத்தில்
கொண்டுள்ளோம்

''பூம்புகார்''
காங்கேசன்துறை. (6733)

- குடும்பத்தினர்

---

## துரைசிங்கம் சோதியம்மா (J.P.)

எமது குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் ஆறாத் துயரில் மூழ்கி இருந்த எமக்கு ஆறுதல் கூறி அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் ஞாயிற்றுக் கிழமை (5-12-93) நடைபெறவிருக்கும் 'அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
கணவன், மக்கள் மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

மோகன் இல்லம்,
உடுப்பிட்டி.

தகவல்:- திருமதி லலிதா இராஜேந்திரம்
(சீமெந்துக் கூட்டுத்தாபனம் K. K. S.) (6744)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1993-12-04

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் மணலாறு, ஒதியமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 27 தமிழ் விவசாயிகள்.

மன்னாரில் சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 106 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்,

1987 ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பகுதியில் இந்தியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**றேகன் - வெள்ளை** (சோமசுந்தரம் விஸ்ணுபாலன்-புலோலி, பருத்தித்துறை)

யாழ்-தையிட்டிப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கண்ணன் ( - - - )**

1988 ஆம் ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான, ஆசிரியர் **நாகமுத்து கருணானந்தசிவம்** (காங்கேசன்துறை·யாழ்)

புன்னாலைக்கட்டுவனில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

1989ஆம் ஆண்டு அம்பாறை, தம்பிலுவில் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகு விபத்தில் எமைப் பிரிந்த,

**தீசன்** (சுபமாலை மேகராசா - அக்கரைப்பற்று- அம்பாறை)

1990 ஆம் ஆண்டு மட்டுநகரில் சிறிலங்காப் படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டு, பின்னர் வாழைச்சேனையில் வைத்து தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட அதே இடத்தைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

1992ஆம் ஆண்டு மட்டு-அம்பாறை, களுவங்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்டதாக்குதலில் வீரச்சாவெய்திய,

**பாரதி** (பொன்னுத்துரை சந்திரகுமார் - வந்தாறுமூலை - மட்டு)

**குணபாலன்-விதுரன்** (சிவராஜ்-மாவடி வேம்பு-மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-8052)

## சிந்தனைக்கு

அவமதிப்பு ஆளாகுவதற்கு தன்னை அனுமதிப்பவன் அவமதிப்புக்கு அருகதை உடையவனே ஆவான்.
-பியேர் கொர் னேய்ல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 04-12-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

# கவரிமான் இல்லாது விடினும் கௌரவமாக.....

சரியான மதிப்பீடுகள் இல்லாத முயற்சிகள், நடவடிக்கைகள் என்பன தோல்வியில் முடிவடைவது தவிர்க்க முடியாது. அதிலும் குறிப்பாக இராணுவ நடவடிக்கை போன்ற விடயங்களில் சரியான கணிப்பீடு இல்லாதவிடத்து பேரிழப்புக்களைச் சந்திக்க வேண்டி ஏற்படுவதோடு பெரும் கண்டனத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாக வேண்டிவரும்.

ஆனால் சிறிலங்காவின் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா இதனைத் தெளிவாக புரிந்து கொள்ளவில்லை போல் தெரிகின்றது. பலத்த இழப்பை உண்டுபண்ணியயாழ்தேவி ஒப்பரேசனின் பிற்பாடும் கூட அவர்இதனைப்புரிந்து கொள்ளவில்லையென்றே கூறவேண்டியுள்ளது. அவ்வாறு புரிந்து கொண்டிருப்பாரேயானால், அம்மோதலின் பின்பும் வருகின்ற ஒக்டோபர்மாதத்திற்குள் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைகண்டுவிட முடியும் எனக் கூறியிருக்கமாட்டார்.

ஆனால், பூநகரி - நாகதேவன்துறை படைத்தளத் தகர்ப்பானது இனப்பிரச்சினையின் விஸ்வரூபத்தை அவருக்குக் காட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை அவர் புரிந்து கொண்டுவிட்டார் என்பதற்குப் படையினரில் நூற்றுக் கணக்கானோர் ஒரே நேரத்தில் உயிரிழந்திருப்பது பற்றி உணர்வதே கடினமாகவுள்ளது. அதைவிடஇரண்டுடாங்கிகளைஅவர்கள்கைப்பற்றிச்சென்றிருப்பதை நம்புவதே கஷ்டமாக இருக்கின்றது என்ற அவரது மலைப்பேஇதனைக் காட்டப் போதுமானதாகும்.

ஆனால், இராணுவத் தளபதி இதனைக் காலம் கடந்தே புரிந்து கொண்டார் என்றே கூறவேண்டும் இதற்கிடையில் பல தோல்விகளைச் சந்தித்தமையால் இராணுவத் தளபதிக்கு எதிராகப் பலத்த கண்டனமும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்து விட்டன.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ''பூநகரிச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்று அரசும் இராணுவத்திற்குப் பொறுப்பானவர்களும் பதவி விலக வேண்டும்'' எனக் கேட்டுள்ளார். அத்தோடு, ஆளும் ஐ. தே. கட்சியில் சிலர் கூட இராணுவத் தளபதியின்

# பாதுகாப்பு நிதியை அதிகரிப்பதால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது

--காமினி பொன்சேகா

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் யுத்தத்தின் ஆரம்ப நிலையை ஆராய்ந்து அதற்கு முதலில் தீர்வு காண்பதே சிறந்தது என்று துணை சபாநாயகர் காமினி பொன்சேகா கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், வருடாவருடம் பாதுகாப்பிற்கு நிதியை அதிகரிப்பதனாலும், குறைநிரப்பு பிரேரணைகளை சமர்ப்பிப்பதனாலும் இப் பிரச்சினை என்றுமே தீரப்போவது இல்லை.

வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக ஒரு தெளிவான கொள்கையின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுக வேண்டும். இதைவிட்டுவிட்டு பிரச்சினை எங்கோ இருக்க பல மைல்கள் தொலைவில் தீர்வை முன் வைத்தால் எதுவும் நடைபெறப்போவதில்லை.எனவே பிரச்சினைக்கு நெருக்கமான தீர்வு ஒன்றையே இன்று முன் வைக்க வேண்டியுள்ளது. இந்த யுத்தத்தின் ஆரம்ப பிரச்சினையை தெளிவாக விளங்கி அதற்கு ஏற்ப செயல்பட வேண்டும். அதுவே இன்று முக்கிய தேவையாக வுள்ளது.

பாதுகாப்பு நிதியை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வருடாவருடம் அதிகரிப்பதோ அல்லது குறைநிரப்பு பிரேரணைகளை நிறைவேற்றுவதன் மூலமோ என்றுமே இப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்றும் தெரிவித்தார்.

### காணாமற் போன படையினரை தேட

# சர்வதேச செஞ்சிலுவையின் உதவி கோரப்பட்டுள்ளது

- விமல் விக்கிரமசிங்க

பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போது காணாமல் போன படைவீரர்கள் பற்றிய விபரங்களைக் கண்டறிய சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் துரித நடவடிக்கையை எடுத்து வருகின்றது

படைவீரர்கள் தொடர்பான விசாரணை விபரங்கள் அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற விவகார அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க திங்கள் மாலை பாராளுமன்றத்தில் ஐ. தே கட்சி எம்.பி ஸ்ரீநாத் குமாரதுங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது இவ்வாறு கூறினார்.

பூநகரிமுகாம் மீதானதாக்குதலின் போது காணாமல் போன படை. வீரர்கள் தொடர்பாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்ற குமாரதுங்கவின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

# உறவுகளை சீராக்கும் முயற்சி முன்னேற்றம் கண்டுள்ளது

-தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

இ. தொ. காங்கிரசிற்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையிலுள்ள உறவுகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கு தான் ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமியகைத்தொழில் சுற்றுலாதுறை அமைச்சருமான திரு எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்,

இரு கட்சிகளுக்கும் இடையில் உள்ள உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது ஒரு துரதிர்ஷ்ட வசமானதாகும். ஐ. தே. கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவருடன் தான் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் தொண்டமான் கூறினார். கடந்த திங்களன்று தான் பேச்சு நடத்திய சிரேஷ்ட தலைவரின் பெயரை கூற தொண்டமான் மறுத்து விட்டார். அவரை நான் பூரணமாக நம்புகிறேன். அவரின் கருத்துக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்துக்களைப் பிரதி பலிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

மாகாண சபை நிர்வாகம் ஒன்றில் இ. தொ. காங்கிரஸ் எதிர்க் கட்சியுடன் இணைந்து செயற்பட விரும்புகிறது என்ற பத்திரிகைச் செய்திகள் பற்றி தொண்டமான் குறிப்பிடுகையில் அப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்துடன் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் இருகட்சிகளுக்குமிடையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என நான் நம்புகிறேன். நாட்டு மக்களின் நலன் கருதி சுமுகமான தீர்வு காணப்படும் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்

# இ,தொ.கா. வாக்குபலத்தை உடைத்தெறிய வேண்டும்

- காமினி ஜயசூரிய

(கொழும்பு)

தொண்டமானின் வாக்கால்தான் பதவிக்கு வர வேண்டும் என்ற நிலை சிங்கள அரசியல் வாதிகளுக்கு இருக்கக் கூடாது. தொண்டமானுக்கு இருக்கும் செல்வாக்கை உடைத்தெறிந்தால் சிங்கள மக்கள் திரண்டு அரசாங்கத்திற்கு வாக்களிப்பார்கள் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்.

இவ்வாறு பௌத்தமத மகாபோதி சங்கத்தின் தலைவரான காமினி ஜயசூரிய கூறியுள்ளார். ராஜகிரிய ஹேறாவா விதாரண மகா வித்தியாலயத்தில் அண்மையில் அதன் தலைவர் சுமித் எதிரி சிங்க தலைமையில் நடந்த வைபவத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது; அமைச்சரவையிலிருந்து கொண்டு தொண்டமான் பொருத்தமற்ற வேண்டுதல்களை முன் வைத்து அரசை நெருக்குகின்றார். அதனால் தொண்டமானின் தாளத்திற்கு ஆட வேண்டியுள்ளது. இதனை முடிவிற்கு கொண்டு வர வேண்டும். அவரது வாக்குச் செல்வாக்கை அரசாங்கம் பெற்றுக் கொண்டதன் விளைவுதான் நாம் இன்று அனுபவிக்கும்இந்தத்துன்பம். இவரது இந்தச் செல்வாக்கை உடைத்தெறிந்தால் நாட்டின் அனைத்து சிங்கள மக்களும் ஒன்றிணைந்து அரசிற்கு வாக்களிப்பர் என நான் அரசிற்கு உறுதியாக கூறிவைக்க விரும்புகிறேன்

நாட்டில் மூன்றிலொரு பகுதியைப் பிரிப்பதற்கு பெரும்பான்மைமக்கள் எதிர்க்கின்றனர். சிங்களவர்கள் ஒரு போதும்பயந்து வாழவில்லை. தேசியபலம் என்பது அரசியல் பலம் அல்ல.இது சிங்கள பௌத்தர்களது பலம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்

நாடு, மதம், இனம் என்பவற்றை பாதுகாக்க அனைவரும் ஒன்றுபட்டு முன் வர வேண்டிய காலம் வந்துவிட்டது. இன்றைய அரசியல் வாதிகளை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளதால் அவர்களது வாக்கு அரசியல் வாதிகளுக்கு கிடைப்பதில்லை. இந்த நிலைமையினால் எப்படியாவது பதவிக்கு வரவேண்டும் என்றஆசையினால் யாருடைய கழுத்திலாவது தொங்கி அதிகாரத்திற்கு வந்து அவர்களது தாளத்திற்கு ஆடும் அரசியல்தான் இன்றைய அரசியல். இந்த நிலை மாற வேண்டும். இந்த நிலையில் ஜனாதிபதி அவர்கள் பயங்கரவாதத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். அவர் ஒரு சிறந்த பௌத்த தலைவர் என்ற கருத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தியுள்ளார். அதனை நிறைவேற்றும் பொறுப்பு அவருடையதாகும் என்றார்.

# கடலில் மிதந்த பொருள் எடுத்தபோது வெடித்தது

முல்லைத்தீவு நந்திக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர் கடலில் மிநந்துவந்த ஒரு பொருளை எடுத்தபோது அது வெடித்து படுகாயமடைந்துள்ளார்,

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த செபஸ்தியான் (வயது 32) என்பவர் கடலில் மிதந்து வந்த சிறிய மூடி போன்ற பொருளை எடுத்து, அதை அமத்திப் பார்த்த போது இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது காயமடைந்தவர் புதுக்குடியிருப்பு அரச மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தையாவார்.

## டயறியாவினால் இளம்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

டயறியா நோய்க்கிலக்கான இளம் பெண் ஒருவர் நேற்று யாழ். போதனா மருத்துவ மனைக்கு கொண்டு வரப்பட்டு மரணமடைந்துள்ளார். இவ்வாறு மரணமானவர் சிறுப்பிட்டிமேற்கு இராச வீதி முகாமில் வசித்துவந்த யோகேஸ்வரி (வயது 19) என்பவராவார். (சி)

## முதன்மை ஆசிரியர் வெற்றிடங்கள்

யாழ். கல்வித்திணைக்கள முதன்மை ஆசிரியர் வெற்றிட விபரங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் வெளியிடப் பட்டுள்ளது.

இவ் வெற்றிடங்களிற்கு விண்ணப்பிக்கவிரும்பும் தகுதியுடையவர்கள் கோட்டங்களில் உள்ள விண்ணப்பப் படிவத்திற்கு அமைய இம் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னதாக யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

# குமாரமங்கலம் ராஜினாமா! குடியரசுத்தலைவர் ஒப்புதல்

# நவாப் ஷெரீப் கொலை முயற்சி;

ஆனால், பூநகரி - நாகதேவன்துறை படைத்தளத் தகர்ப்பானது இனப்பிரச்சினையின் விஸ்வரூபத்தை அவருக்குக் காட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனை அவர் புரிந்து கொண்டுவிட்டார் என்பதற்குப் படையினரில் நூற்றுக் கணக்கானோர் ஒரே நேரத்தில் உயிரிழந்திருப்பது பற்றி உணர்வதே கடினமாகவுள்ளது. அதைவிடஇரண்டுடாங்கிகளைஅவர்கள்கைப்பற்றிச்சென்றிருப்பதை நம்புவதே கஷ்டமாக இருக்கின்றது என்ற அவரது மலைப்பேஇதனைக் காட்டப் போதுமானதாகும்.

ஆனால், இராணுவத் தளபதி இதனைக் காலம் கடந்தே புரிந்து கொண்டார் என்றே கூறவேண்டும் இதற்கிடையில் பல தோல்விகளைச் சந்தித்தமையால் இராணுவத் தளபதிக்கு எதிராகப் பலத்த கண்டனமும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துவிட்டன.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ''பூநகரிச் சம்பவத்திற்குப் பொறுப்பேற்று அரசும் இராணுவத்திற்குப் பொறுப்பானவர்களும் பதவி விலக வேண்டும்'' எனக் கேட்டுள்ளார். அத்தோடு, ஆளும் ஐ. தே. கட்சியில் சிலர் கூட இராணுவத் தளபதியின் திறமை குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை இராணுவத் தரப்பில் உள்ள சிலர் கூட இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னா மீது குறை கூறத் தொடங்கியுள்ளனர். முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்கா உட்பட முன்னாள் படைத்துறை அதிகாரிகள் இராணுவத்தினது தப்பான கணிப்பீடு குறித்து கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதற்கு அரசாங்கமும் சிறிது செவிசாய்ப்பது போல் உள்ளது. பூநகரி தோல்வியை இராணுவத் தளபதி மீது நேரடியாகச் சுமத்தி அவரை பதவி விலக்காது விட்டாலும், வடக்கிற்கு இராணுவ நடவடிக்கைக்குப் பொறுப்பான அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவை நியமித்தமை இராணுவத் தளபதியின் முகத்தில் கரிபூசும் நடவடிக்கையே

அதாவது இராணுவத் தளபதி மீது கண்டனங்கள் அதிருப்தி என்பன ஒருபுறம் எழுந்துள்ள. அதேவேளை மறுபுறத்தில் அவரை ஓரம் கட்டுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றே கூறலாம். இதன் மூலம் பூநகரித் தோல்விக்கு இராணுவத் தளபதியின் மீது பொறுப்பைப் போட்டுவிட்டு அரசாங்கம் தப்பிக்கப் பார்க்கின்றது. இதனை ஆயுதப் படையிலும்பாதுகாப்பு அமைச்சிலும் உள்ளசிசிலுக்கு விரோதமான சக்திகளும் பயன்படுத்தக்கூடும் என்றே எதிர்பார்க்கலாம்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை மூன்று மாதத்தில் காணலாம்; ஆறுமாதத்தில் காணலாம் என இராணுவத் தீர்வு குறித்து அரசாங்கத்திற்கு நம்பிக்கை அளித்தவர்கள் இதற்கான கணிசமான பொறுப்பை ஏற்க வேண்டியதும் நியாயமானதே. ஆனால், இராணுவத்தை விட அரசியற் பிரச்சினைக்கு இராணுவத்தை ஏவிய அரசாங்கமே முதலில் பதவி விலகி இருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு எவரும் சிந்தித்ததாகவே தெரியவில்லை.

ஆனாலும், இராணுவத்தளபதி சிசில்வைத்தியரெட்னா ''கவரிமான்'' போல் இல்லாது விடினும் தனக்கு எதிராக எழுந்த கண்டனங்களைத் தொடர்ந்தாவது பதவி விலகியிருக்க வேண்டும் இது அவர் தோல்வியை ஒப்புக் கொள்வதாகவே இருக்கும் இதனால் அவமானப்பட வேண்டியிருக்காது சில வேளை முன்னுதாரணமாகக் கூட அமையலாம் ஆனால், இதற்கு அவர் தயாராக இல்லாத பட்சத்தில் தொடர்ந்தும் அவமானங்களைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அதில் பெரும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிராமியகைத்தொழில் சுற்றுலாதுறை அமைச்சருமான திரு. எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்,

இரு கட்சிகளுக்கும் இடையில் உள்ள உறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது ஒரு துரதிர்ஷ்டவசமானதாகும். ஐ. தே. கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவருடன் தான் நடத்திய பேச்சு வார்த்தைகளின் விளைவாக முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் தொண்டமான் கூறினார். கடந்த திங்களன்று கட்சியின் கருத்துக்களைப் பிரதி பலிக்கின்றன என்றும் அவர் கூறினார்.

மாகாண சபை நிர்வாகம் ஒன்றில் இ. தொ. காங்கிரஸ் எதிர்க் கட்சியுடன் இணைந்து செயற்பட விரும்புகிறது என்ற பத்திரிகைச் செய்திகள் பற்றி தொண்டமான் குறிப்பிடுகையில் அப்பிரச்சினைகளுக்கு அரசாங்கத்துடன் தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் இருகட்சிகளுக்குமிடையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு காணப்படும் என நான் நம்புகிறேன். நாட்டு மக்களின் நலன் கருதி சுமுகமான தீர்வு காணப்படும் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்

## எடுத்தபோது வெடித்தது

முல்லைத்தீவு நந்திக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர் கடலில் மிதந்துவந்த ஒரு பொருளை எடுத்தபோது அது வெடித்து படுகாயமடைந்துள்ளார்,

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த செபஸ்தியான் (வயது 32) என்பவர் கடலில் மிதந்து வந்த சிறிய மூடி போன்ற பொருளை எடுத்து, அதை அமத்திப் பார்த்த போது இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது காயமடைந்தவர் புதுக்குடியிருப்பு அரச மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர் ஐந்து பிள்ளைகளின் தந்தை யாவார்.

## டயறியாவினால் இளம்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

டயறியா நோய்க்கிலக்கான இளம் பெண் ஒருவர் நேற்று யாழ். போதனா மருத்துவ மனைக்கு கொண்டு வரப்பட்டு மரணமடைந்துள்ளார். இவ்வாறு மரணமானவர் சிறுப்பிட்டி மேற்கு இராச வீதி முகாமில் வசித்துவந்த யோகேஸ்வரி (வயது 19) என்பவராவார். (சி)

## வெற்றிடங்கள்

யாழ். கல்வித்திணைக்கள முதன்மை ஆசிரியர் வெற்றிட விபரங்கள் கோட்டக்கல்வி அலுவலகங்களில் வெளியிடப் பட்டுள்ளது.

இவ் வெற்றிடங்களிற்கு விண்ணப்பிக்கவிரும்பும் தகுதியுடையவர்கள் கோட்டங்களில் உள்ள விண்ணப்பப் படிவத்திற்கு அமைய இம் மாதம் பத்தாம் திகதிக்கு முன்னதாக யாழ். கல்வித் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்களை கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (பா)

# குமாரமங்கலம் ராஜினாமா! குடியரசுத்தலைவர் ஒப்புதல்

(டில்லி)

மத்திய அறிவியல், தொழில் நுட்பவியல், மற்றும் பாராளுமன்றத்துறை இணை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்தின் ராஜினாமாவைக் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா ஏற்றுக்கொண்டு விட்டதாக ராஷ்டிரபவன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரது ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளும்படி பிரதமர் பி. வி. நரசிம்மராவ் சிபார்சு செய்திருந்தது தெரிந்ததே.

அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களின் போது காங்கிரஸ் கட்சியின் நடத்தை தொடர்பாக இணை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் அதிருப்தி தெரிவித்து கருத்து வெளியிட்டிருந்ததை தொடர்ந்து அவர் ராஜினாமா செய்யுமாறுகேட்கப்பட்டார்.

ரங்கராஜன் குமாரமங்கலத்தின் ராஜினாமாவைத் தொடர்ந்து அவர் கவனித்து வந்த அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் துறைகள் பிரதம மந்திரியின் அலுவலக இணை அமைச்சர் புவனேஷ் சதுர்வேதியிடமும், நாடாளுமன்ற விவகாரத்துறை வெளியுறவு இணை அமைச்சர் எட்வார்டோ பெயஸ் ரோவிடமும்ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# நவாப் ஷெரீப் கொலை முயற்சி; மயிரிழையில் உயிர் தப்பினார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரியும், முஸ்லிம் லீக் கட்சியின் தலைவருமான நவாப் ஷெரீப் மீது மேற்கொள்ளப்பட்டகொலை முயற்சியில் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார் தேசிய சட்டப்பேரவைக்கான இடைத்தேர்தல்களில் லாகூர் பகுதியின் பல்வேறு வாக்குச் சாவடிகளையும் சுற்றிப் பார்வையிட்ட போது மேற்படி கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வாக்குச் சாவடி ஒன்றிற்கு சமீபமாக இருந்த மாடிக் கட்டடம் ஒன்றிலிருந்து நவாப் ஷெரீப் பயணம் செய்த வாகன அணியின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவரது பாதுகாவலர்கள் திருப்பிச் சுட்டனர் என்றும், தொடர்ந்து இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் இருவர் காயமுற்றனர் ன்றும் கூறப்படுகின்றது. பதினேழு நிமிடங்கள் வரையில் இந்தத் துப்பாக்கிச் சண்டை நீடித்ததாகவும் தெரிய வருகிறது.

## தேர்தலில் 13 குழுக்கள்

(மாஸ்கோ)

எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள ரஷ்ய பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட 13 அரசியல் குழுக்களுக்கு ரஷ்யா அனுமதியளித்தது. போட்டியிடுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட 8 எதிர்கட்சிகளில் ரஷ்ய தேசிய யூனியனும் ஒன்றாகும்.

தேர்தலில் போட்டியிட தேவையான 100,000 கையொப்பங்களை சமர்ப்பிக்க தவறியமையே இக்கட்சிகள் போட்டியிட தடைவிதிக்கப்பட்டமைக்கு காரணம். எனினும் இவ்வளவு அதிகமான கட்சிகள் போட்டியிட தகுதி பெறாத நிலை ரஷ்யாவில் சுதந்திரமான தேர்தல் நடைபெறுமா என்பது குறித்து மேற்கு நாடுகளில் கேள்வி எழுந்துள்ளது

கீழ்சபையின் 450 இடங்களில் அரைப்பகுதி இடங்களுக்கு 13 கட்சிகள் போட்டியிடுகின்றன. விகிதாசார தேர்தல் முறையின் கீழ் அவை போட்டியிடுகின்றன- பாராளுமன்ற ஆதரவாளர்களின் கிளர்ச்சியை அடக்கிய பின் ஜனாதிபதி யெல்ட்சின் கடும் போக்குடைய கட்சிகளை தடைசெய்து 15 பத்திரிகை நிறுவனங்களையும் மூடியுள்ளார்-

## நாடுகடத்தல்

துருக்கி நாட்டவரான இமாம் ஒருவரை பிரான்ஸ் நாடு கடத்தியது. சட்டத்தை மீறி அல்லாவின் பிரசாரங்களை இவர் மேற்கொண்டதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் காரியக் கமிட்டி பிரதமருக்குப் பாராட்டு

(டில்லி)

காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டி தனது சிக்கலான பிரச்சினைகளை பொதுக் கருத்து வாயிலாக தீர்த்துக் கொள்ளும்என்று உறுதிபடக் கூறியுள்ளது. புதுடில்லியில் நேற்று முன்தினமிரவு தனது கூட்டத்தை நடாத்திய காரியக் கமிட்டி பிரதமர் பி,வி. நரசிம்மராவ் பதற்றமான பிரச்சினைகளைக்கையாண்ட விதம் குறித்துத் தனது பாராட்டுதல்களையும் வெளியிட்டது. அயோத்தியா விவகாரத்தின் பின்னர் நான்கு மாநிலங்களிலும் இருந்த பாரதீய ஜனதா அரசுகளை மத்திய அரசு கலைத்தமையை மக்கள் அங்கீகரிப்பதாக அண்மைய தேர்தல் முடிவுகள் அமைந்திருப்பதாகவும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது

## கல்யாண்சிங் தெரிவானார்

உத்தரப்பிரதேசமாநிலத்தில் 177 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் சட்டப் பேரவைத் தலைவராக முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை மத்திய பிரதேச மாநிலத்தில் இக் கட்சி படுதோல்வி அடைந்துள்ளமை குறித்து கட்சி சுய மதிப்பீடு செய்துகொள்ளல் வேண்டும் என்று மேலிடத்திடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது.

ராஜீவ் கொலை வழக்கு

# குற்றம் சாட்டப்பட்டோர் சுற்றவாளி என தெரிவிப்பு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு அவர்கள் புரிந்த குற்றம் எவை என்பது கடந்த புதன் நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்பட்டது. கடந்த அமர்வில் நீதிமன்றம் வராத சில குற்றஞ் சாட்டப்பட்டவர்களும் கடந்த புதன் நீதிமன்றம் வந்திருந்தனர் முருகன், நளினி, இரும்பொறை, சாந்தன், ரவிச்சந்திரன், சுசீந்திரன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

குற்றப்பத்திரிகை அவர்கள் முன் வாசிக்கப்பட்டதும் குற்றவாளியா சுற்றவாளியா என வினவப்பட்டபோது முருகன் தவிர்ந்த மற்றவர்கள் தாம் சுற்றவாளிகள் என்றனர். முருகன் மௌனமாக நின்றார். அரச தரப்பு வழக்கு இனி ஆரம்பிக்கப்படவுள்ளது. சாட்சியங்கள் விசாரிக்கப்படும்.

ஆனால்சிறப்பு நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக நளினி உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதிடும் வழக்கறிஞர் துரைசாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை வழக்கிற்கு கொண்டு வரும் வகையில் அவரை இந்தியாவிற்கு பெற்றுத்தருமாறு சி. பி ஐ. வெளியுறவு அமைச்சிடம் கேட்டுள்ளது. அதேசமயம் இந்திய அரசு இடைநிலை அமைச்சர் குழுவொன்றை அமைத்துள்ளது. பாதுகாப்பு, உள்துறை, அமைச்சுகள் மற்றும் றோ அமைப்பு ஆகியவற்றின் அதிகரிகாள் இக் குழுவில் உள்ளனர். பிரபாகரனை இந்தியாவிற்கு வழக்கிற்காககொண்டு வரும் வழிமுறைகளை இவர்கள் விதந்துரைப்பர் என தெரிவிக்கப்படுகிறது.

உரம் இல்லை என்று சொல்லாதே - இயற்கை
உரம் உன் காலடியில் மறவாதே.

# வேடம்போடும் தமிழ்க் குழுக்களை அரசு கண்டுபிடிக்க வேண்டும்

### ராஜ மனோகரி புலேந்திரன்

(கொழும்பு)

ஜனநாயக நீரோட்டத்திற்கு மற்றைய தமிழ்க் குழுக்கள் வந்து விட்டார்கள் என்று கூறுகின்ற போது கூட இங்கே மறைமுகமாக வேடம் போட்டுள்ள வேடதாரிகளை அரசாங்கம் இனங் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் ராஜ மனோகரி புலேந்திரன் அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது கேட்டுக்கொண்டார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், வடக்கு கிழக்கு பகுதியிலே போர் நடப்பதாகக் கூறிவருகின்ற போதும், மற்ற இடங்களிலும் அமைதி இருப்பதாகத்தெரியவில்லைகிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக கொழும்பிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றார்கள் இவர்கள் யாரால் கைது செய்யப்படுகின்றனர்? பொலிஸ் மற்றும் முப் படைகளைத் தவிர இன்னும் வேறு விதமான படையினர் நாட்டில் சேவையில் ஈடுபட்டுள்ளனரா? இராஜாங்க அமைச்சரின் பாதுகாப்பில் இருக்கும் இளைஞர் ஒருவர் கூட கடத்தப்பட்டுள்ளார். அப்படியானால் யார் இந்தக் குழுவினர்?

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் அரசாங்கத்தின் நன்மை கருதி விசுவாசமாக இயங்குகின்றனவா? எந்த நிலைப்பாட்டில் அவர்களுடைய தொழிற்பாடு அமைந்துள்ளது? நம்ப நட நம்பி நடவாதே என்ற சுலோகத்தை இச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## பரிசளிப்பு வைபவம்

பரிசளிப்பு வைபவம் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் யாழ்ப்பாணம் வடக்கு கல்விப்பணிப்பாளர் க சந்தசாமி தலைமையில்நடைபெற உள்ளது முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் தெற்கு கல்விப்பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பியும், சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையைச் சேர்ந்த வே. பாலகுமார் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

## விமானத்

றக்காவீதியையடைந்தது.

றக்காவீதியில் அமைந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். பிரதிநிதியிடம் குருநகர் யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையினால் உலக நாடுகளுக்கு ஆலயசேத விபரங்களை தெரியப்படுத்தும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பின்னர் கோயில் வீதிவழியாக மீண்டும் பேரணி ஆரம்பித்து யாழ். ஆஸ்பத்திரி வீதிச்சந்தியை யடைந்துகண்டிவீதி வழியாக யாழ்.செயலகத்தை சென்றடைந்தது யாழ். செயலகத்தில் யாழ்,


## மரண அறிவித்தல்கள்



### திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

துன்னாலை வடக்கைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்) 2-12-1993 (வியாழக்கிழமை) காலமானார். இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை (கூட்டுறவு பரிசோதகர்), திருமதி புஷ்பராணி, செல்வநந்தம் (பொலிஸ் உத்தியோகத்தர்),காலம்சென்ற உதயகுமார் (பொலிஸ் பரிசோதகர்), சிவகுமார் (சவுதி அரேபியா), சுரேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா (பிரதம பொறியியலாளர், நியூசிலாந்து), இந்திராதேவி, சிவானந்த தேவி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவலிங்கம், சிவனடியார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதியாபரணம், திலகவதி ஆகியோரின் மைத்துனரும் விநாயகமூர்த்தி, இளங்கோ, குமணன், மயூரன், பரதன், செந்தூரன், ஐங்கரன், சசிதரன், அரவிந்தன், பிரதீபா, பிரமிளா, பிரவீணா, சுசித்தா, ரமேஷ்குமார், மேகலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4-12-1993 சனிக்கிழமை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வி. கேதீஸ்வரன் (மகன்)

(6761)


# இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில் ஒருவர் பலி!

### தலையை வெட்டிச் சென்றனர்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணி கற்குளம் சந்தியில் இராணுவத்தினர்பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவர் பலியானார். வயல் வேலை செய்துவிட்டு திரும்பிய ஐவர் மீது படையினர் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியானார்; இருவர் காயமடைந்தனர், மற்றைய இருவரும் தப்பியோடிவிட்டனர்.

கொல்லப்பட்டவரின் தலையை படையினர் வெட்டி எடுத்துச் சென்றுவிட்டனர். நேற்று முன் தினம் மாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் தயாபரன் (நெடுங்கேணி) என்பவரே கொல்லப்பட்டவராவார்.

## குண்டு

கொழும்பில் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்காவை நேரடியாகச் சந்தித்து உரையாடும்போதே அரச அதிபர் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை யாழ் செயலகம்மீது நடாத்தப்பட்ட குண்டு வீச்சு தாக்குதல் தொடர்பான ஆதாரங்களான புகைப்படங்கள் மற்றும் பத்திரிகைச் செய்திகளையும் காண்பித்து அரச அதிபர் செயலகக் கட்டடத்தை திருத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

இதனை அடுத்து யாழ். செயலக கட்டடத்தை திருத்துவதற்கு தேவையான சகல பொருள்களையும் உடனடியாக அனுப்பிவைப்பதாக உறுதி அளித்த ரணில் விக்கிரமசிங்கா இதற்கான உத்தரவை பாதுகாப்பு அமைச்சிற்கு பிறப்பித்துள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துளார்.

மேலும் கட்டடத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து நிர்மாணத்துறையினர் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டது தெரிந்ததே. இம் மதிப்பீட்டை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் அவசர செய்தி ஒன்றை நேற்று யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்

## பூநகரி

மீதானகுண்டுவீச்சில் ஒன்பது மக்கள் அங்கு இறந்தனர். 53 பேர் காயமடைந்தனர்.

கேள்வி: இது குறித்து கத்தோலிக்க மதபீடம் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா?

பதில்: அவர்கள் அரசுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன் வத்திக்கானுக்கும் இதை அறிவித்துள்ள

## வெள்ளத்தால்

அதிபர்கள் தத்தமது பிரிவின் கிராம சேவகர்கள் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்களின் உதவியுடன் விநியோகிக்கப்படும் இந் நிவாரணத்திற்கான நிதியைப் பெறும் பொருட்டு உதவி அரசாங்க அதிபர்களிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் விபரங்களை அறிவிக்குமாறு சமூக சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதற்கிணங்க கடந்த முதலாம் திகதியன்று பெறப்பட்ட தகவல்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக கிடைக்கப்பெற்றுளளது. இதன்படி யாழ்ப்பாணம் 1500, நல்லூர் 1200, சண்டிலிப்பாய் 2500, சங்கானை 600, உடுவில் 2000, தெல்லிப்பளை 300, குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஏனைய உதவி அரசாங்க அதிபர்களிடமிருந்துஇப்புள்ளி விபரம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைமேற்படி நிவாரணம் வழங்குவது தொடர்பாக கொழும்பில் நிற்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சமூகசேவைகள் அமைச்சுடன் தொடர்பு கொண்டதை அடுத்து மேற்படி அமைச்சு வெள்ள நிவாரணம் வழங்க அனுமதி அளித்துள்ளதாக கிடைத்த செய்தியை அடுத்தே நேற்றைய கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

(ச)

## மூதூர்

- ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கி -01
- அதற்கான ரம் ரவை கூடுகள் -04
- ரவை தொடர் -495
- ரி 56 துப்பாக்கிகள் -05
- ரி 81 துப்பாக்கி -01

## வழிபாட்டு

புனித யாகப்பர் தேவாலயத்தின் மீது சுப்பர் சொனிக் ஜெற் விமானம் போட்ட இரு பாரிய குண்டுகளினால்தேவாலயக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்ததோடு, குருமனையும், பங்கு மண்டபமும் சேதத்துக்குள்ளாகின, ஒன்பதுபேர் தலத்திலேயே கொல்லப்பட்டனர். இவர்களில் இருவர் உயிருடன் கருகினர். எல்லாமாக இருபத்தொன்பதுபேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். குண்டுவீச்சுத் தாக்குதலினால் பாதிப்புக்குள்ளான அனைவரும் இறை வழிபாட்டிற்காக தேவாலயத்துக்கு வந்த கத்தோலிக்க சமயப் பக்தர்கள் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும்;

கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் வழிபாட்டு இடங்களில் தஞ்சம் புகுமாறுசிறிலங்கா அரசு மக்களைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொள்கிறது. பிறகு தஞ்சமடைந்தோர்மீது விமானப் படைகள் குண்டு போட்டுக் கொன்றுவருகின்றன.

இவ்வாறான மிருகத்தனமான செயல்கள் மீளவும் நடைபெறாது தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டுளளது.

## அடையாள அட்டை

லைப் பரீட்சார்த்திகள் மாத்திரம் ஆள்அடையாளத்தை நிரூபிப்பதற்கு மேற்குறிப பிட்டவையேனும் இல்லாத விடத்து அதிபர்கள் அப்பரீட்சார்த்தியின் புகைப்படப் பிரதி இரண்டுடனும் அப்பரீட்சார்த்தியுடனும் கல்விப் பணிப்பாளரை நேரில் சந்தித்துப் படப்பிரதிநிதியை உறுதிப்படுத்தி அப்பிரதியினை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அடையாளத்தை நிரூபித்து பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 2 00 மணி முதல் 4-00 மணி வரையும் நாளை முற்பகல் 9-00 மணி முதல் 12-00 மணி வரையும் கல்விப்பணிப்பாளரைக் கல்வித் திணைக்களத்தில் சந்திக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது

(பா)

## கொழும்பு

மடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முஸ்லிம்களின் தாக்குதல்களைத் தொடர்ந்து கண்ணீர் புகைப் பிரயோகம் குண்டாந்தடிப் பிரயோகமும் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆங்காங்கே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதனைத்தொடர்ந்துபுறக்கோட்டை, கோட்டை,வாழைத்தோட்டம் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

கடைகள் அவசர அவசரமாக இழுத்து மூடப்பட்டன மக்கள் ஓட்டமும் நடையுமாக வெளியேறினர் வாகனங்களும் அப்புறப்படுத்தப்பட்டன இதனால் இப்பகுதி ஸ்தம்பித நிலை அடைந்தது.

## அகிம்சை

செயலக உதவி அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்து உரையாற்றுகையிலேயே குருமுதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒருபுறம் தார்மீகம் எனக் கூறிக் கொண்டு மறுபுறத்தில் அதற்கு எதிரான ஓர் நடவடிக்கையை சிறிலங்கா அரசு தமிழ்மக்கள் மீது மேற்கொண்டு வருகிறது. தமிழர்களின் கல்வி, கலாசாரங்களுக்கு ஆப்பு வைக்கும் விதத்தில கல்வியை அழிக்க பாடசாலைகள், நூலகங்கள்மீதும் கலாசாரத்தை அழிப்பதற்கு மதஸ்தாபனங்கள் மீதும் தாக்குதல்களை நடாத்தி வருகின்றது.

நாம் சிறிலங்கா அரசிடம் விடுக்கும் வேண்டுகோள் தமிழ் மக்களாகிய நாம் சுதந்திரமாகவாழ விரும்புகின்றோம். நாம் சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிக்கவில்லை. எமது மக்களின் உரிமைகளையே கேட்டு நிற்கிறோம் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வின்போது சிவத்தமிழ்ச் செல்வி துரந்ததி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு ஜெயராஜ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(ச, நி)


## மரண அறிவித்தல்கள்



பிள்ளை தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்) 2-12-1993 (வியாழக்கிழமை) காலமானார். இவர் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கணபதிப்பிள்ளை (கூட்டுறவு பரிசோதகர்), திருமதி புஷ்பராணி, செல்வனந்தம் (பொலிஸ் உத்தியோகத்தர்), காலஞ்சென்ற உதயகுமார் (பொலிஸ் பரிசோதகர்), சிவகுமார் (சவுதி அரேபியா), சுரேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வராசா (பிரதம பொறியியலாளர், நியூசிலாந்து), இந்திராதேவி, சிவானந்ததேவி, செல்வராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவலிங்கம், சிவனடியார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதியாபரணம், திலகவதி ஆகியோரின் மைத்துனரும் விநாயகமூர்த்தி, இளங்கோ, குமணன், மயூரன், பரதன், செந்தூரன், ஐங்கரன், சசிதரன், அரவிந்தன், பிரதீபா, பிரமிளா, பிரவீணா, சுசித்தா, ரமேஷ்குமார், மேகலா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 4-12-1993 சனிக்கிழமை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**வி. கேதீஸ்வரன் (மகன்)**

(6761) (யாழ் போதனாவைத்தியசாலை)

---



மலர்வு:
30. 06. 1923

மறைவு:
03. 11. 1993

## திருமதி
## அமிர்தநாதர் பாக்கியநாயகி

மாதகலைச் சேர்ந்தவரும் 1992இல் இடம் பெயர்ந்து பண்டிவிரிச்சான் படுவில் வசித்தவருமான திருமதி அமிர்தநாதர் பாக்கியநாயகி (பாக்கியம்) 03. 11. 1993இல் மடுவில் காலமானார். இவர் அமிர்தநாதரின் அன்பு மனைவியும், யோசேப் (உரிமையாளர் இளங்கோ பாணகம் மாதகல்), லூசியாப்பிறக்சிற் (மணி), கிறேஸ், ஜெயக்குமார், கிறிஸ்ரீனா - (பபா - ஜெர்மனி), பெர்னாண்டோ - (அன்ரன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இருதயநாயகி, யேசுதாசன், மரியதாஸ், யாக்கோப் சுந்தரலிங்கம் (ஜெர்மனி) லூர்துமேரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும். ஏபன் இளஞ்செழியன் (மாறன் - போராளி), இளங்கோ இளங்குமரன் - ஜோண்சன், சியாமளா, யூர்மனா, நெவின்சன் - டானியேல் ஜான்சி - ஜெயபாலன் -மேசி, பிறிஸ்க்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார் அன்னாரின் ஈமைச்சடங்குகள் 3. 11. 1993 மாலை 5 மணிக்கு மடுவில் நடந்தேறியது. இவ் அறிவித்தலை மாதகல் மக்களும், உறவினர்கள, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
கணவன், மக்கள்,
பேரப்பிள்ளைகள்

தகவல்:
(மகன்) **அ.யோசேப்**
இளங்கோ பாணகம்
செந்தில்வீதி. மாதகல். (6763)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

ழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையைச் சேர்ந்த வே. பாலகுமார் அவர்களும் கலந்து கொள்கின்றனர்.

---

## விமானத்

றக்காவீதியையடைந்தது.

றக்காவீதியில் அமைந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க யாழ். பிரதிநிதியிடம் குருநகர் யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தையினால் உலக நாடுகளுக்கு ஆலயசேத விபரங்களை தெரியப்படுத்தும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

பின்னர் கோயில் வீதிவழியாக மீண்டும் பேரணி ஆரம்பித்து யாழ். ஆஸ்பத்திரி வீதிச்சந்தியை யடைந்துகண்டிவீதி வழியாக யாழ்.செயலகத்தை சென்றடைந்தது யாழ். செயலகத்தில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல் அவர்களிடம் யாழ். மறைவட்டக்குரு முதல்வர் அருட்திரு. எஸ் ஏ. இம்மனுவல் அடிகளாரினால் சிறிலங்கா ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது மகஜர் கையளிப்பதற்க்குமுன்னர் பொதுமக்கள் முன்பாக யாழ், மறைவட்ட குரு முதல்வரினால் மகஜர் வாசிக்கப்பட்டது.

இதற்கு முன்பாக குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத்தந்தை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கம்பன் கழக அமைப்பாளர் திரு ஜெயராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள் மகஜரைப் பெற்றபின் யாழ். மேலதிக அரச அதிபர் உரையாற்றினார்.

இப்பேரணி காலை 9-30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து நண்பகல் 12 மணிக்கு யாழ்.செயலகத்தை யடைந்தது. பேரணியில் கலந்து கொண்ட மக்கள் சறுப்புப் பட்டி அணிந்திருந்தனர். குருமார்களில் சிலரும் பொது மக்களில் சிலரும்தமது வாயை கறுப்புத் துண்டினால் கட்டியிருந்தார்கள். ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் அமைதியாக சுலோகங்களை தாங்கிச் சென்றார்கள்:

ஊர்வலத்தை ஒழுங்குபடுத்தவும் வீதிக் கடமைகளை மேற்கொள்ளவும் தமிழீழ காவல்துறையினர், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், குருநகர் கடற்சாரணர்குழு ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கு தாகசாந்தி அளித்தது. ஊர்வலத்துக்கு ஆதரவு வழங்கும் நோக்குடன் குருநகரில் நேற்றைய தினம் வர்த்தக ஸ்தாபனங்கள் மூடப்பட்டிருந்தன.

(17, 21, ச, நி, சி,)

---

ஏற்பட்ட சேதங்கள் குறித்து நிர்மாணத்துறையினர் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டது தெரிந்ததே. இம் மதிப்பீட்டை உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ். அரச அதிபர் அவசர செய்தி ஒன்றை நேற்று யாழ் செயலகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்

---

## பூநகரி

மீதானகுண்டுவீச்சில் ஒன்பது மக்கள் அங்கு இறந்தனர். 53 பேர் காயமடைந்தனர்.

கேள்வி: இது குறித்து கத்தோலிக்க மதபீடம் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா?

பதில்: அவர்கள் அரசுக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன் வத்திக்கானுக்கும் இதை அறிவித்துள்ளனர்.

கேள்வி: தாக்குதலுக்கு அரசபடைகள் சுப்பர் சொனிக் பொம்மர்களை பயன்படுத்துவதாக கூறப்படுகிறது உண்மையா?

பதில்: சுப்பர்சொனிக்விமானம்தான் எமது செயலகத்திற்கும் சென் ஜேம்ஸ் தேவாலயத்திற்கும் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும் குண்டு போட்டது. இரண்டாம் நாள் திருநெல்வேலியில் பாடசாலை மீது குண்டு போட்டதும் சுப்பர்சொனிக் பொம்பர்தான்.

கேள்வி: பாடசாலைமீதான தாக்குதலில் குழந்தைகள் எவரும் காயமடைந்தனரா?

பதில்: சிறிது நேரத்திற்கு முன்ஹெலிகொப்டர் ஒன்று வந்து துப்பாக்கி சூடு நடத்தியதில் பிள்ளைகள் வெளியேறி விட்டனர் இருப்பினும் அதிபருக்கும் ஓர் ஆசிரியைக்கும் காயம் ஓர் ஆசிரியையின் கால் அகற்றப்பட்டு விட்டது சில மாணவிகளும் காயமடைந்தனர்.

கேள்வி: கல்வித்துறை அமைச்சரிடம் இது பற்றி நீங்கள் பேசலாமே?

பதில்: இங்கு வந்து பாதுகாப்பு அமைச்சிற்கு நடந்ததை கூறி சுப்பர்சொனிக் குண்டுவீச்சு மற்றும் யாழ்ப்பாண நிலை மற்றும் விமானங்கள் புரியும் அநியாயங்களையும் எடுத்து விளக்கினேன்.நேற்று பிரதமருடன் பேசிய போதும் இதுபற்றிய விபரங்களை சமர்ப்பித்தேன் அவரும் தாம் கடும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

கேள்வி: அரசின் பொருளாதார தடையால் மருந்து தட்டுப்பாடு உள்ளது காயமடைபவர்களுக்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது

பதில்: சிகிச்சை நடைபெறுகிறது எனினும் மருந்து சில தட்டுப்பாடாகவே இருக்கிறது.

---

பாக கொழும்பில் நிற்கும் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சமுகசேவைகள் அமைச்சுடன் தொடர்பு கொண்டதை அடுத்து மேற்படி அமைச்சு வெள்ள நிவாரணம் வழங்க அனுமதி அளித்துள்ளதாக கிடைத்த செய்தியை அடுத்தே நேற்றைய கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

(ச)

---

## மூதூர்

- ஏ.கே. இலகு இயந்திர துப்பாக்கி -01
- அதற்கான ரம் ரவை கூடுகள் -04
- ரவை தொடர் -495
- ரி 56 துப்பாக்கிகள் -05
- ரி 81 துப்பாக்கி -01
- ஏ கே. ரக ரவைகள் கூடுகள் -14
- ஐ.எம். ரவைகள் - 1044
- ஏ.கே. ரவைகூடு தாங்கி -05
- ஜே.ஆர். கைக்குண்டு -04
- மழைக்கவசம் -06
- சப்பாத்து -ஒருசோடி
- இராணுவ இடுப்புப் பட்டி -02
- இராணுவ பை -02

என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

---

## செயலகத்தின்

இதேவேளை எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் மாணவர்கள் பீதியற்ற நிலையில் தோற்றுவதற்கு குண்டுவீச்சு ஷெல் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் அரச அதிபர் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

---

கேள்வி: தற்போது மக்கள் உணர்வலைஎன்ன?

பதில்: நேற்றும் பிரதமருடன் பேசும்போது இதற்கு ஓர் அரசியல் தீர்வுக்கு வழி வகுக்குமாறு கேட்டேன் இராணுவத்தீர்வு சரிவராது என்று நான் அவருக்கு பல காரணங்களையும்காட்டிவிளக்கினேன் அரசியல் வழியில் போகுமாறு தான் நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

கேள்வி: அவர்களின் பதில் என்ன?

பதில்: அவர்கள் கொஞ்சம் யோசித்து வருகின்றனர். பூநகரிச் சம்பவத்திற்குப் பின்னர் இந்நிலை என்ன மாதிரி மாற்றம் வரும் என்று கூறமுடியவில்லை. எனினும் சில யோசனைகள் இருப்பதாகத் தெரிகிறது.

கேள்வி: போருக்கு முடிவு ஏற்படும் என நம்புகிறீர்களா?

பதில்: ஒரு நாளைக்கு போர் முடியத்தானே வேண்டும். ஆரம்பித்தால் முடிதயத்தானே வேண்டும்.

---

பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் அடையாளத்தை நிரூபித்து பரீட்சைக்குத்தோற்ற அனுமதிக்கப்படுவர் எனத் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 2 00 மணி முதல் 4-00 மணி வரையும் நாளை முற்பகல் 9-00 மணி முதல் 12-00 மணி வரையும் கல்விப்பணிப்பாளரைக் கல்வித் திணைக்களத்தில் சந்திக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது (பா)

---

றோம். நாம் சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிக்கவில்லை. எமது மக்களின் உரிமைகளையே கேட்டு நிற்கிறோம் என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது சிவத்தமிழ்ச் செல்வி துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி மற்றும் அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு ஜெயராஜ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (ச, நி)

---

# மரண அறிவித்தல்கள்



## லயன் - L. றேமன் முத்தையா

கரம்பனூரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் 67/1 கோவில் வீதியில் வசித்தவரும் முன்னாள் நீர்ப்பாசன இலாகா பொறியியலாளரும், பொதுநல சேவைகளில் பணியாற்றி வருபவருமாகிய லயன் L. றேமன் முத்தையா அவர்கள் 03-12-93-ல் காலமானார். அன்னார் நவமணியின் அன்புக் கணவரும் குமார், காந்தி மகேந்திரன், டாக்டர் கமால், குமுதினி மரியநாயகம், டாக்டர் கிருஷ்ணி சிறீபதி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

67/1, கோவில்வீதி, யாழ்ப்பாணம். (6770)

நவமணிமுத்தையா (மனைவி)

---

## செல்லையா நித்தியானந்தசிவம்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா நித்தியானந்தசிவம் 11 11. 93இல் இந்தியாவில் காலமானார். இவர் லீலாவதியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன் (ஜேர்மன்), சுபாசினி, ரவிச்சங்கர், லகுபரன் (மாவீரன் 2ஆம் லெப் ரட்ணம்), சுகந்தி, வாசுகி ஆகியோரின் அன்புத் தந்தையும் தருமராஜா (மாவீரன் லெப். கேணல் புலேந்திரன்) வின் மாமனாரும், தருமசீலனின் பேரனும், அருந்தவராஜா (இலங்கைத் துறைமுக அதிகார சபை, திருமலை), பாக்கியநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், லவேந்திரன், அனுசியா, வெங்கட்குமரன் ஆகியோரின் பெரியப்பாவுமாவார் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

தகவல்:
திருமதி இ. அருந்தவராஜா

(6768)